செ.வெ.எண்:239 நாள்:11.04.2018

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம் கண்ணநல்லூர் கிராமத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 75 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.இன்பதுரை அவர்கள் முன்னிலையில் வழங்கினார்.

----

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம் கண்ணநல்லூர் கிராம சமுதாய கூடத்தில் மாவட்ட ஆட்சியரின் சிறப்பு மனுநீதி நாள் முகாம் இன்று (11.04.2018) நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். மேலும் 75 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.இன்பதுரை முன்னிலை வகித்தார்.

மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

மாவட்ட தலைநகரங்களிலிருந்து, தொலைதூர கிராம மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் அக்கிராமத்திற்கு சென்று அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நடத்துவது தான் மனுநீதி நாள் முகாம் ஆகும். அரசு அலுவலர்கள் அரசின் திட்டங்களை பெற தகுதிகள் என்ன என்பதையும், எவ்வாறு பெற வேண்டும் குறித்தும் தெரிவித்துள்ளவைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும். மாவட்ட வருவாய் அலுவலர் மூலமும் மாதம் ஒரு கிராமத்தில் மனுநீதி நாள் முகாமினை நடத்தப்பட்டு வருகிறது. மனுநீதி நாள் முகாமை முன்னிட்டு ஒரு மாதத்திற்கு முன்பே இப்பகுதியில் 167 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. இதில் 74 மனுக்களுக்கு இன்று நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மீதமுள்ள மனுக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படும். தமிழக அரசின் சார்பில் பொதுமக்களுக்கு நேரடியாக சமூக பாதுகாப்பு திட்டம், மற்றும் பல்வேறு திட்டங்கள் மூலம் மூலம் பல்வேறு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் வளர்ச்சி திட்டங்களாக சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் செய்யப்படுகிறது. வேலைவாய்புகளை உருவாக்கும் பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட தொழில்மையம், தாட்கோ மற்றும் பல்வேறு திட்டங்களின் மூலம் கடனுதவி பெற்று தொழில் தொடங்கி பல்வேறு நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க முடியும்.

மகப்பேறு உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் ரூ.18 ஆயிரம் மூன்று தவணைகளில் வழங்கப்படுகிறது. திருமண உதவித் திட்டத்தில் 8 கிராம் தங்கத்துடன் உதவித்தொகை வழங்குவது பெண் கல்வியை ஊக்கப்படுத்தும் திட்டமாகும். இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அம்மா திருமணம் மண்டபம் கட்டப்படவுள்ளது, இப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் பல திட்டங்களும், உவரி பகுதியில் மீன் பதப்படுத்தும் மையமும் அமைக்கப்படவுள்ளது. இப்பகுதியில் விளையாட்டு மைதானம் 5 ஏக்கர் பரப்பளவிலும், மத்திய அரசின் மூலம் ஓட்டுநர் பயிற்சி மையம் ரூ.5 கோடியிலும் அமைக்கும் திட்டமும் செயல்படுத்தப்படவுள்ளது. இப்பகுதி மக்களின் வருமானத்தை உயர்த்திடும் வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது. என பேசினார்.

தொடர்ந்து வருவாய்த்துறையின் மூலம் 40 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 15 நபர்களுக்கு மாதாந்திர உதவித்தொகைக்கான உத்தரவினையும், வேளாண்மை துறையின் மூலம் 2 விவசாயிகளுக்கும், தோட்டக்கலைத்துறை மூலம் 6 விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய வேளாண் கருவிகளையும், புதிய குடும்ப அட்டை 4 நபர்களுக்கும், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் 4 நபர்களுக்கு புல்கரணைகளையும், 4 நபர்களுக்கு தாது கலவை உப்பு பாக்கெட்களையும் என மொத்தம் 75 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., வேளாண்மை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மாவட்ட தொழில் மைய திட்ட மேலாளர் திரு.கணேசன், மாற்றுத்திறனாளி நல அலுவலர் திருமதி.சாந்தி குளோரி எமரால்டு, மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் திரு.விஜயகுமார், முக்கிய பிரமுகர்கள் திரு.ஆழகாநந்தம், திரு.அந்தோணி அமலராஜா, திரு.முருகேசன், திரு.எட்வட்சிங், திரு.கல்யாணசுந்தரம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.